


# வேலனின் அருளில் உலகம் உய்ய

# VELANIN ARULIL ULAGAM UYYA
## (SALVATION OF THE WORLD BY THE GRACE OF VELAN)

இரண்டாவது வெளியீடு
09.11.2017

Second Issue on
09.11.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

"Aruvamum uruvamaagi anaathiyai palavai ondrai
Brahmamai ninra sothi pilambathor meniyaaki
Karunaikoor mugangal aarum karangal pannirandum konde
Oru thirumurugan vanthangu uthithanan ulagam uyya"

## 25.08.2018 அன்று 6வது தேர்த் திருவிழா

**காலை 10.20 மணி முதல் பி.ப 01.20 மணிவரை நடைபெறும்**

---

**முக்கிய குறிப்பு:**

ஆலயத்திற்கு வருபவர்கள் 24 மணி நேரத்திற்கு முன்பு மாமிசம் அல்லது மாமிசம் கலந்து உணவுகளை உட்கொள்ளாது இருத்தல் வேண்டும்.

*Not to eat non-veg or non-veg mixed food before 24 hours of entering temple.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் சக்திவேல் ஓம்'
'Om Shakthivel Om'

**இந்நூலைப்பற்றி:**

வேலனின் அருளில் உலகம் உய்ய இரண்டாவது பதிப்பு (2017)

எழுத்தாளர்கள் : கங்கா, பூனம், N.S.K
தொகுப்பு : ஓம் சக்திவேல் ஆலயம்
வெளியீடு : சக்திவேல் இந்து சங்கம்
அச்சுப்பதிவு : SSR பதிப்பகம், யாழ்ப்பாணம்.
அச்சிட்ட பிரதிகள் : 5000

எமது இந்து சமயத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, ஓம் சக்திவேலின் அருளை இவ்வுலகிற்கு எடுத்துக் கூறுவதே இவ்வுன்னத வெளியீடாகும்.

இப்பிரதியை இலவாசமாக பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்,
சக்திவேல் இந்து சங்கம்.

**"ஓம் சக்திவேலை நம்பி தன்னம்பிக்கையுடன்**
**எந்தவொரு காரியத்தையும் செய்...**
**நீ வெற்றி பெறுவாய்"**

---

**THIS BOOK**

Velanin Arulil Ulagam Uyya (2017) Second Edition

Writers : Ganga, Poonam, N.S.K
Editing : Om Shakthivel Temple
Printing : SSR Printers, Jaffna.
Issued by : Shakthivel Hindu Association
Printed Copies : 5000

This book is being issued in order to spread the knowledge of Hindu Religion and of Lord Om Shakthivel to the world.

This edition is free.

**By: Shakthivel Hindu Association**

**"You Believe Om Shakthivel with self confidence**
**He guides you in the right path and you will succeed"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் சக்திவேல் ஓம்'

*'Om Shakthivel Om'*

**பொருளடக்கம்**


1. உள்ளம் உணர கேட்டேன் மனமுருக தந்தார் ஓம் சக்திவேல் 5
2. நம்பிக்கையுடன் சென்றேன் - வேண்டிய வரம் தந்த ஓம் சக்திவேல் 9
3. அன்பே வடிவான வடிவழகன் ஓம் சக்திவேல் 11
4. கருணை கொண்ட ஓம் சக்திவேல் 13
5. வயதைப் பார்ப்பவர் அல்ல - அன்பை நேசிப்பவரே இறைவன். 17
6. எங்கள் குல தெய்வம் ஓம் சக்திவேல் 20
7. வெற்றியை தருபவரே ஓம் சக்திவேல் 24
8. அற்புத ஆலயம் 28
9. தாய் சந்நதிவேலும் ஓம் சக்திவேலும் / மாமிசம் உண்டவனை மணி அடித்து பார்க்க வைத்த வள்ளி மணவாளன் 32


**"அருள் வாக்கு உரைத்து அற்புதங்கள் ஆற்றும் சக்திவேல்"**

## Contents


1. Unbelievable Om Shakthivel 7
2. You believe Om Shakthivel – He guide you in the right way 10
3. Our Lovable God Om Shakthivel 12
4. The Grace Of Om Shakthivel 15
5. In Front of God - No Age 19
6. Our Family God – Lord Om Shakthivel 22
7. Whoever believes Om Shakthivel gains victory 26
8. The Wonderful Om Shakthivel Temple 30
9. Mum Sannathivel and Om Shakthivel / Who eats non-veggie, he's come as priest – a blessing of Lord Muruga 34


**"Arul Vaakuraithu Arputhangal Aatrum Shakthivel"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

க.நாகராசா ஆகிய நான் கடந்த 30 ஆண்டுகளாக உயர்வாசற்குன்று முருகப்பெருமானுக்கு ஆன்மிக தொண்டை ஆற்றி வருகிறேன். அது மட்டுமன்றி கடந்த 5 வருடமாக ஓம் சக்திவேல் ஆலயத்திற்கும் அடியேன் இறைபணி ஆற்றியதையிட்டு, பெரும் பாக்கியத்தை முருகப்பெருமான் தந்துள்ளார் என்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

வாழ்க்கையில் அல்லற்பட்டு, அவதிப்பட்டு, திசை தெரியாது நிற்கும் அடியார்கள் ஓம் சக்திவேல் ஆலயம் வந்து ஓம் சக்திவேலை உள்ளன்புடன் வேண்டுகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்களுக்கு அவர்கள் கேட்கும் வரங்களை தந்து வயிறார உணவளித்து வருகிறார் எல்லாம் வல்ல ஓம் சக்திவேல். ஆலயத்தில் நடைபெறும் பூசை முறைகளையும், அன்னதானத்தையும் காணும்போது நாங்கள் நிற்பது செல்லக்கதிர்காமமா? செல்வ சந்நிதியா? அல்லது மண்டூரா? என்று நினைக்க தோன்றுகிறது.

அடியார்கள் ஓம் சக்திவேலிடம் எதனை வேண்டி வழிபாடு செய்தார்களோ அவையெல்லாம் தங்களுக்கு கிடைத்திருப்பதாக பெருமிதம் கொள்கின்றனர்.

ஓம் சக்திவேல் ஆலயத்தின் 5ஆம் வருட சங்காபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற இரண்டாவது (2017) புனித நூலின் ஆசியுரையை எழுதுவது ஓம் சக்திவேலலின் ஆணைக்கு இணங்கவே.

இவ்வுன்னத நூல் வெளியீடு மென்மேலும் முருகப்பெருமானின் பெருமையை இவ்வுலகிற்கு எடுத்து கூறும்.

ஓம் சக்திவேலின் அருட்கடாட்சம் எல்லா இன மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும், இவ்வாலயம் மென்மேலும் வளர வேண்டுமென்றும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குகிறேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**திரு.க.நாகராசா,**
**செயலாளர்,**
**உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்,**
**லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# About the book

I am Mr K. Nagarajah. I have been dedicating my life to Lord Muruga at Highgate Murugan Temple for the past 30 years. Under the Om Shakthivel order, I have been helping at the Om Shakthivel Temple in Haringey, London for nearly 5 years now. I feel so proud and blessed for getting such kind of opportunity. People who are suffering in their life whether mentally or physically, they come and pray to Om Shakthivel wholeheartedly and honestly.

In turn Om Shakthivel lessens their burdens and brings happiness in their life. Normally, after prayers the temple management provides food to all the devotees. The way the prayers are carried out and the food are being served is same like the temples in Kathirkamam, Selva Sannathi and Mandur in Sri Lanka. At the Om Shakthivel Temple whatever the devotees ask and pray to Om Shakthivel, their wishes are fulfilled and they get success in life.

The second edition of the book "Velanin Arulil Ulagam Uyya" is being released on the special occasion of the 5th Anniversary (2017) of the Om Shakthivel Temple. I consider myself to be lucky to write about this holy book under the order of Om Shakthivel in which it tells about the power and grace of Om Shakthivel. Such book should continuously be released in the future years where it will spread more knowledge and guidance of Om Shakthivel. I wish that all people in the world should get the blessing of Om Shakthivel and may the Om Shakthivel Temple grow more and become bigger and more famous.

**'Menmai Kol Saiva Neethi Vilanguka Ulagam Yellam'**
"Om Shakthivel Om"

**Mr. K. Nagarajah,**
**Secretary,**
**Highgate Murugan Temple,**
**London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம் உணர கேட்டேன். மனமுருக தந்தார் ஓம் சக்திவேல்

ஓம் சக்திவேலின் அற்புதம் ஒன்றை "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தின் இரண்டாம் பதிப்பில் (2017) எழுத வாய்ப்பு தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றி கூறுகிறேன்.

எனது பெயர் தர்ஷன் குமரலிங்கம். இலங்கையில் இணுவில் என்ற இடத்தில் பிறந்தேன். தற்போது சுவிற்சர்லாந்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். சுவிஸ் சென்ட் கல்லென் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஓம் சக்திவேல் பூசகரை சந்தித்த போது, ஓம் சக்திவேல் ஆலயத்தைப்பற்றி அறியப்பெற்றேன். எனது மனக்கஷ்டங்களை அவரிடம் கூறினேன். அப்போது அந்த பூசகர் அதற்குரிய பரிகாரங்களை செய்யுமாறு சொன்னார்.

நான் சற்று யோசித்தேன். ஞானிகளோ, யோகிகளோ, தியான நிலையில் சொல்வதை தான் நான் அறிந்திருக்கிறேன். ஆனால் இவரோ சாதாரணமாக என் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கூறிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். ஆனால் அவர் சொன்னதெல்லாம் உண்மை.

ஒரு முறை தொலைபேசியில் எனது மனக்கஷ்டங்களை அவரிடம் கூறிய போது "இதை நீங்கள் செய்யுங்கோ" என்றார்.

அவர் சொன்னது "சுவிஸ் சென்ட் கல்லென் கதிர்வேலாயுத ஆலயம் சென்று 18 வெற்றிலையும் ஒரு தாம்பூலத்தில் வைத்து அதன் மேல் கொஞ்சம் மலர்களும், ஒரு ரூபாயும் வைத்து கொடுத்து விடுங்கள்" என்றார். அன்று எனக்கு வெற்றிலை கிடைக்கவில்லை. நான் மூன்று வெற்றிலையை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கொடுத்து வந்தேன்.

பின்பு நான் ஓம் சக்தி வேல் பூசகரை தொடர்பு கொண்ட போது, தான் சொன்னதை நீங்கள் சரியாக செய்யவில்லை என்று கூறினார். நான் திகைத்து போய் நின்றேன்.

மீண்டும் ஒரு முறை நான் செய்ய அனுமதி தரும்படி கேட்டேன். அதற்கு அவர் ஒரு நாளை குறித்து தந்தார். அவர் சொன்னது அனைத்தும் அப்படியே செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் அவரை தொலைபேசியில் அழைத்தபோது "உங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கப் போகிறா, மற்றும் நீங்கள் சொந்தமாக வீடு வாங்கப் போகிறீர்கள் என்றார். என்னால் அவர் சொன்னதை நம்ப முடியவில்லை. அது எப்படி! என்றேன். அவர் சொன்னார் நீங்கள் ஓம் சக்திவேலை நம்புங்கள். அவர் உங்களுக்கு தருவார் என்றார்.

நான் ஓம் சக்திவேலை மனமார நம்பினேன். இன்று எனது புது இல்லத்துக்குரிய வேலை ஆரம்பமாகி விட்டது. நவம்பரில் பெண் குழந்தையும் பிறக்கப்போகிறா.

இன்னொரு எதிர்பாராத மகிழ்ச்சி என்னவென்றால், சென்ற ஆண்டில் "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தில் எழுதிய எனது சிறு வயது நண்பரின் தொடர்பு 22 வருடம் கழித்து கிடைத்தது.

நான் 5 ஆம் வருட தேர்த்திருவிழாவிற்கு (06.08.2017) செல்ல முடிவெடுத்தேன். குடும்பத்துடன் லண்டன் சென்று தேர்த்திருவிழாவில் பங்குபற்றினோம். உள்ளன்புடன் ஓம் சக்திவேலை வணங்கினோம்.

அங்கே எனது சிறு வயது நண்பரையும் நேரில் கண்டேன். லண்டனில் இருப்பதை மறந்து தாய் நாட்டில் இருப்பது போலவே உணர்ந்தேன். ஏனென்றால் 5 ஆம் வருட தேர்த்திருவிழா என்பதால், 5 நாதஸ்வரம், 5 தவில், இசை முழங்க ஓம் சக்திவேல் தேரேறி வீதி உலா வர 2 மணித்தியாலத்திற்கு மேல் பிடித்தது.

இப்படியொரு தேர்த்திருவிழாவை லண்டன் ஓம் சக்திவேல் ஆலயத்தில் பார்த்தபோது நானும் எனது குடும்பத்தாரும் ஆனந்த மகிழ்ச்சி கொண்டோம்.

ஓம் சக்திவேலின் உணவு செல்வச்சந்நதி வேலனின் உணவு போலவே இருந்தது.

எனக்கு கிடைத்தது போலவே ஓம் சக்திவேலனின் அருட்கடாட்சம் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

*'ஓம் சக்திவேல் ஓம்'*

**என்றும் பக்தியன்புடன்,**
**திரு தர்ஷன் குமாரலிங்கம்,**
**சென்ட் கல்லன்,**
**சுவிஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Unbelievable Om Shakthivel

My name is Tharshan Kumaralingam. I was born in Inuvil, Sri Lanka. I'm living in St Gallen, Switzerland with my family. I'm thankful to Om Shakthivel Temple for publishing my story in the 2017 edition of the book "Velanin Arulil Ulagam Uyya".

I met the priest of Om Shakthivel Temple at Kathirvelayutha Suvami Temple in St Gallen, Switzerland where he told me about Om Shakthivel. Thereafter, I told him about the critical situations I'm having in my life. He provided me with some remedies. I thought that normally the Gurus and the Yogis, they do the dhyanam (meditation) and then they resolve our problems. But this person, he was telling all these very ordinarily like a common man. I was surprised as whatever he was saying to me all were true. One time I called him and explained my current situation, he said. "Do this!"

What he said was to take 18 betel leaves, some flowers, 1 swiss franc coin and placed them in a tray and to offer to the Kathirvelayutha Suvami. Unfortunately, I got only 3 betel leaves instead of 18 and I gave them in the temple.

I called the Om Shakthivel priest. He straight away told me, "Whatever I told you to do,you did not do it".

I was shocked. I did not know what to say. Then, I asked him to give me another day. He gave me another day and for that day whatever he told to offer in the temple, I offered.

I called him again. He answered my call and said, "I got 2 good news. The first one is for a new house and the second is for a baby girl".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I asked for him, "How?" He asked me if I believe Om Shakthivel? I told him, "Yes, I heartily and honestly believe. He said, "So, he will give you these two". Now, with the blessings of Om Shakthivel, I started the work for my own new house and my baby girl is due in November 2017.

I got another happiness when I read the 2016 edition of the book "Velanin Arulil Ulagam Uyya". There's one story in it which is of my childhood friend. After 22 years, I got his contact.

I heartily thought, I want to see Om Shakthivel Temple. So, me and my family, planned to fly to London for the 5th Chariot Festival on 6th August 2017 to visit the Om Shakthivel Temple.

When I saw the Om Shakthivel Chariot driven on the road for over 2 hours together with a team of 5 drum players (nadaswaram thavil) playing, I felt like I'm in my homeland. The Chariot Festival was so amazing and colourful. To my great surprise, I met my childhood friend during this event.

I believe this Chariot is different compared to any other chariots in Europe countries. I and my family are very happy to participate in this event. The food at the Om Shakthivel Temple is so similar to that of Selva Sannathi Temple in Sri Lanka. I have the blessings of Om Shakthivel and I wish that Om Shakthivel bestows his blessings to all the people in the world also.

"Om Shakthivel Om"

**With Love & Devotion,**
**Mr. Tharshan Kumaralingam,**
**St Gallen,**
**Switzerland.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையுடன் சென்றேன் - வேண்டிய வரம் தந்த ஓம் சக்திவேல்

திரு சு. குவேந்திரனாகிய எனக்கு 2011ஆம் ஆண்டு என் நண்பர் ஒருவர் மூலம் ஓம் சக்திவேல் ஆலயம் அறிமுகமானது.

எனது குடும்பத்துடன் நான் ஓம் சக்திவேல் ஆலயம் சென்றபோது, சிறிய ஓரிடத்தில் அமையப் பெற்றிருந்தது. இன்று அதையும் விட விசாலமாக இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது. அவரின் அருள்கடாட்சம் போலவே தற்போது ஆலயம் அமையப் பெற்றிருக்கின்றது.

அதுமட்டுமன்றி, செல்வச்சந்நதி போல வருவோர் எல்லோருக்கும் வயிறார உணவளித்து வருகிறார். துன்பத்துடன் செல்பவர்களுக்கு இன்பங்கள் அளித்து அன்பு ஆலயமாக அமைந்திருக்கின்றார். இதை பற்றி நான் சொல்வதற்கு காரணம் என்னவென்றால் நான் அதை நூறு வீதம் அனுபவித்திருக்கின்றேன்.

இங்கிலாந்தில் நிரந்தரமாக வாழ்வதற்கு ஓம் சக்திவேலின் அருட்கடாட்சம் எங்களுக்கு கிடைத்தது. அதுமட்டுமன்றி எங்கள் மகளின் வருத்தத்தை குணப்படுத்தியும், எங்களுக்கு ஆண் குழந்தை வேண்டும் என்ற வேண்டுதலை நிறைவேற்றியும், எனது மனைவியின் வாகன சாரதி பத்திரம் பெறுவதற்கும் எங்கள் மனதில் என்றும் நீங்காத ஓம் சக்திவேலே எல்லா அருட்கடாட்சத்தையும் என் குடும்பத்திற்கு தந்தார்.

எனக்கும் என் குடும்பத்திற்கும் அன்றும், இன்றும், என்றும் குடும்ப தெய்வமாகவும், வழிகாட்டியாகவும் திகழ்பவர் ஓம் சக்திவேல்.

"வேலனின் அருள் உலகம் உய்ய'' என்ற 2017ஆம் ஆண்டு புத்தகத்தில் எழுத வாய்ப்பு தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

முழு நம்பிக்கையுடன் ஓம் சக்தி வேலிடம் வாருங்கள்....

அவரின் அருளைப் பெறுங்கள்.........

*'ஓம் சக்திவேல் ஓம்'*

என்றும் அன்புள்ள,
திரு சு. குவேந்திரன் மற்றும்,
குடும்பம்,
ஈஸ்ட் ஹாம், லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# You believe Óm Shakthivel – He guide you in the right way

I am S. Kuventhiran and with great pleasure I'm sharing the experience I had since I started visiting the Om Shakthivel Temple. In the year 2011, one of my friend introduced Om Shakthivel Temple to me.

When I first went to Om Shakthivel Temple with my family, it was in a small place. The temple is now more spacious than it was before. Lord Shakthivel is great. His grace is immense like the power of the temple.

Similar to Selva Sannathi Temple in Sri Lanka, Om Shakthivel Temple offers food to all the devotees who come to the temple. Lord Shakthivel blesses his devotees with happiness and success for those who are suffering from affliction. The reason why I say this is mainly based on my own experience.

We got all the blessings of Om Shakthivel. First He gave us the way to become permanent residents in the UK. He helped us to cure our daughter's illness. We wanted a baby boy and Lord Shakthivel fulfilled our wish. Lastly, with Lord Shakthivel's blessing, my wife managed to obtain her full driving licence. Om Shakthivel is our family God in the past, present and future.

We express our sincere gratitude to Om Shakthivel Temple, which gave the opportunity to write in the 2017 book, "Velanin Arulil Ulagam Uyya"

I am telling you "come to Om Shakthivel with confidence and get his blessings".

"Om Shakthivel Om"

**Always Loving,**
**Mr. Kuventhiran & Family,**
**East Ham, London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பே வடிவான வடிவழகன் ஓம் சக்திவேல்

பிரித்தானியாவை பூர்விகமாகக் கொண்ட பிரிட்டனில் பிறந்த நான், சென்ற முதல் இந்து ஆலயம் ஓம் சக்திவேல் ஆலயம்.

2014ல் இருந்து எனக்கு மிகவும் கடினமான பிரச்சனைகள் இருந்து வந்தன. ஜூன் 2016ல் திரு பாலசுரேஷ் குடும்பத்தினர் மூலம் எனக்கு வேலை வாய்ப்புகளும், வசதிகளும் கிடைத்த போதும், பழைய பிரச்சினைகளால் மன நிம்மதி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

திரு பாலசுரேஷ் அவர்கள் ஓம் சக்திவேல் ஆலயத்தை பற்றி அறியத்தந்தார். அங்கு செல்வதற்கு முன்பு ஒரு நாள் முழுவதும் (24 மணிநேரம்) மாமிசமோ, மாமிசம் கலந்த உணவோ உண்ணாமல் இருந்தேன். நான் என் வாழ்வில் சைவம் சாப்பிட்டு இருந்தது இதுவே முதல் தரம்.

**"அங்கு சென்று வந்த பின்பு என் வாழ்வில் பெரிய ஒரு மாற்றம் கிடைத்தது."**

"வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற 2017ஆம் ஆண்டின் புத்தகத்தில் எனக்கு எழுத வாய்ப்பு தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றியை கூறுகிறேன்.

நான் உண்மையாக நேசிக்கும் அன்பு தேவன் ஓம் சக்திவேல்

*'ஓம் சக்திவேல் ஓம்'*

**விசுவாசத்துடன்,**
**திரு ஜேம்ஸ் பக்கிங்காம்,**
**ஹேய்ஸ்,**
**ஐக்கிய இராச்சியம்.**

**"இவ்வுலக மக்கள் அனைவருக்கும் அருள் கொடுக்கும்**
**அன்பே வடிவிலான கலியுக தெய்வம் கந்தப்பெருமான்"**

-ஓம் சக்திவேல் ஆலயம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Lovable God Om Shakthivel

I was born to British parents who are originally from Britain. The Om Shakthivel Temple is the first Hindu Temple ever I have been to.

Since 2014, I went through tough times and faced hard difficulties in my life. In June 2016, I met Mr Balasuresh family and they helped me a lot by getting a job. I got other facilities as to which I was able to lead a normal life. However, I could not have peace of mind as the old problems kept on affecting my life.

Mr Balasuresh is a sincere devotee of Om Shakthivel Temple. He told me about the temple after which I decided to visit. The Om Shakthivel Temple has a rule which is that 24 hours before entering the Temple, one should be vegetarian and not eating any non vegetarian or any non-vegetarian mixed food. A day before visiting the temple, I stayed vegetarian for 24 hours for the first time in my life.

I prayed to Lord Shakthivel to find solutions to my problems. After visiting the temple, I noticed a positive change in my life.

I express my gratitude to the Om Shakthivel Temple, which gave me the opportunity to write in the 2017 book "Velanin Arulil Ulagam Uyya"

....OM SHAKTHIVEL...THE LORD THAT I TRULY LOVE...

"Om Shakthivel Om"

**Truly and sincerely,**
**Mr J. Buckingham,**
**Hayes,**
**UK.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணை கொண்ட ஓம் சக்திவேல்

நான் 2013 ஆம் ஆண்டு முதல் ஓம் சக்திவேல் ஆலயத்தின் பக்தையாக இருக்கிறேன். பொதுவாகவே நான் மாமிசம் சாப்பிடுவேன். என் பெற்றோர்கள் என்னை கோவிலுக்குள் நுழைவதற்குள் 24 மணி நேரம் முன்பு மாமிசம் உட்கொள்ளாது இருக்கச் சொன்னார்கள்.

இது என் மனதிற்கு வித்தியாசமாகப்பட்டது. அதன்பின் இந்த ஆலயத்தின் முக்கிய விதிமுறைகளில் இதுவுமொன்று என உணர்ந்தேன். என் பெற்றோர்கள் வேண்டுகோளால் இவ்வாலயத்திற்கு செல்ல முடிவெடுத்தேன்.

முதல் முதலாக ஆலயத்திற்கு சென்றவுடன் வாயடைத்துப் போய் நின்றேன். எனக்கு எதுவுமே புரியவில்லை. மற்ற கோவில்களுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் வேறுபட்டிருந்தது.

ஆலயத்திற்குள் நுழைவதற்கு முன் கை, கால்கள் கழுவ வேண்டும் என அப்போது தான் அறிந்தேன்.

இது போன்ற விதிகள் இருப்பதை இதற்கு முன் நான் கேள்விப்பட்டதே இல்லை. ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு போகும் முன்னர் எனக்கு பல குழப்பங்கள் மனதில் இருந்தன. ஆனால் அங்கு சென்ற பிறகு எல்லா வெற்றியையும் ஓம் சக்திவேல் தந்தார்.

என் பல்கலைக்கழக இளங்கலை படிப்பில் நன்றாகவே தேர்ச்சி பெற்றேன். வாகன சாரதி தேர்வில் ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றேன். ஒரு நிரந்தரமான வேலையும் எனக்கு கிடைத்தது.

இவை எல்லாம் ஓம் சக்திவேல் அருளாலேயே நடந்தது. சமீபத்தில், என் குடும்பத்தார் ஒரு வீடு வாங்குவதில் சிக்கல்களை எதிர்கொண்டனர்.

அது ஒரு வருடத்துக்கு மேலாக இழுபட்டுக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் ஓம் சக்திவேலை இந்த பிரச்சினைகளை தீர்த்து தருமாறு மனமார வேண்டினோம். சில மாதங்களுக்குள் சக்தி வாய்ந்த ஓம் சக்திவேலின் ஆசிர்வாதத்துடன் எங்கள் வீட்டை வெற்றிகரமாக வாங்கினோம். நானும் எனது குடும்பமும் ஓம் சக்திவேல் ஆலயத்தில் முழு நம்பிக்கை வைத்து எங்கள் பலவேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் கண்டு வருகிறோம்.

ஓம் சக்திவேல் எங்களை சரியான பாதையில் வழி நடத்துகிறார். அது மட்டுமன்றி கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் ஆசைகளையும் விருப்பங்களையும் ஓம் சக்திவேல் நிறைவேற்றுகிறார்.

"வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தின் இரண்டாம் பதிப்பில் எழுத வாய்ப்பு தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றி.

*'ஓம் சக்திவேல் ஓம்'*

**உண்மையுள்ள,**
**செல்வி துவாரகா பாலச்சந்திரன்,**
**கன்னிங்டௌன்,**
**லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Grace Of Om Shakthivel

I have been a devotee at Om Shakthivel Temple since 2013. My parents convinced me a lot to visit Om Shakthivel Temple. Before attending, I thought to myself, this is just another ordinary temple with a priest carrying out the everyday poojas just as you do in all other temples. But I can assure you, this temple is not just full of faith but with immense power to help and direct us in the right path, and most importantly fulfil our wishes and desires.

Usually I am a non-vegetarian person but my parents asked me not to eat any non vegetarian food for 24 hours prior to entering the temple. This is one of the major rules of this temple which I found a bit odd. But because my parents kept asking me, I decided to follow their orders.

The first time I went to the temple, I was speechless. I could not understand anything. Everything was completely different compared to other temples. Then I realised that I had to wash my hands and feet before entering the temple. It was the very first time to my knowledge that I came across such rules. After I entered the temple, I could feel the positive energy prevailing in that place. I saw the priest doing the poojas white and white which surprised me a lot.

After visiting the Om Shakthivel Temple, my life was blessed and full of positivity. I had questioned my life choices, from the subject I had chosen to study at degree level to getting a secure job. But after attending Om Shakthivel Temple, literally everything came positively in my way. From achieving a 1st in my dissertation and passing university with a 2:1 BA Honours, passing my practical driving test which I honestly had no hope despite my faith in Om Shakthivel and to bagging a permanent job.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Recently, my family were facing issues with purchasing a property, it had been dragging on for over a year. We had visited Om Shakthivel again, asking for his help. With the blessing of Om Shakthivel, within couple of months, we had successfully purchased our property.

Like this, my family and myself, we have put all our faith here at Om Shakthivel Temple from seeking solutions to various problems and assistance in taking the right path to success. In return, we have conquered our problems and are living happily with the blessings of Om Shakthivel.

I am very thankful to Om Shakthivel Temple for giving me the opportunity to share my experience in the second edition of the book 'Velanin Arulil Ulagam Uyya'.

"Om Shakthivel Om"

**Sincerely,**
**Miss Duvaraka Balachandran,**
**Canning Town,**
**London**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5வது தேர்த்திருவிழாவின்போது (06.08.2017)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 5வது திருவிழாவின்போது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5வது தேர்த் திருவிழாவின்போது (06.08.2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5வது தேர்த் திருவிழாவின்போது (06.08.2017)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயதைப் பார்ப்பவர் அல்ல - அன்பை நேசிப்பவரே இறைவன்.

மௌனிஷா பாலசுரேஷ் ஆகிய நான் என் பெற்றோருக்கு முதலில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் தான் எனக்கு எப்படி கடவுளை வணங்க வேண்டும் என்றும், வயதில் மூத்தவருக்கு எப்படி மரியாதை அளிக்க வேண்டும் என்றும் கற்றுக் கொடுத்தார்கள். என் பெற்றோர்கள் மிகவும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். என் வாழ்வில் நானும் அவர்களையே பின்பற்றுவேன்.

எனக்கு இன்னும் 15 வயது கூட ஆகவில்லை. ஆனால் நான் "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தின் இரண்டாம் பதிப்பில் (2017) எழுதுகிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இப்புத்தகத்தில் அவர்களின் உண்மைக்கதைகளை எழுதியவர்கள் என்னை விட வயதில் மூத்தவர்கள் மற்றும் அனுபவசாலிகள்.

நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

**கடவுள் வயதைப் பார்ப்பதில்லை. யார் தன் மீது அதிக அன்பும், பக்தியும் கொண்டிருக்கிறார்களோ என்று தான் பார்ப்பார்!**

யார் கடவுள் மீது உண்மையான அன்பை வைத்திருக்கிறார்களோ, அவர்களை வெற்றி பாதைக்கு அழைத்து செல்வார்.

அப்பப்பா மூலம் தான் எங்களுக்கு ஓம் சக்திவேல் ஆலயம் தெரிய வந்தது. ஒரு சில அனுபவங்களை உங்களுக்கு சொல்கிறேன். நான் முதல் முதலில் இந்த ஆலயத்திற்கு சென்ற போது புதுமையாக இருந்தது. அங்கே செய்யும் பூசை முறைகளும், நிர்வகிக்கும் முறைகளும் மற்ற ஆலயங்களுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டது.

என் தந்தைக்கு ஜெராட்ஸ் கிராஸ்ஸில் வீடு வாங்குவது கனவாக இருந்தது. ஒரு நாள் அந்த வழியே சென்ற போது 3 வீடுகள் கட்டிக் கொண்டிருந்தனர். பின்பு விளம்பரத்தையும் பார்த்தோம். அங்கே என் தந்தை கூறிய எல்லா அம்சங்களுடனும் ஒரு வீட்டை பார்த்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தந்தையிடம் இந்த வீட்டை வாங்க வேண்டும் என்று கேட்டேன். என் தந்தையோ நமக்கு ஒரு வீடு இருக்கிறதே ஏன் இன்னுமொரு வீடு என மறுத்து விட்டார்.

அதன் பின்பு நான் மாமிசம் உண்ணாமல் 36 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் 36 தடவை "ஓம் சக்திவேல் ஓம்" என்று எழுதினேன். ஓம் சக்திவேலிடம் என் தந்தை எப்படியாவது அந்த வீட்டை வாங்க உதவுமாறு உள்ளன்புடன் வேண்டினேன்.

என்னுடைய வேண்டுதலை ஓம் சக்திவேல் நிராகரிக்கவில்லை. என் தந்தையின் கனவு இல்லத்தை வாங்குவதற்கு எல்லாம் வல்ல ஓம் சக்திவேல் அருள் புரிந்தார். இந்த கதையை எழுதும்போது தந்தையின் கனவு இல்லத்தில் இருக்கின்றோம்.

நீங்களும் ஓம் சக்திவேலிடம் முழு நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யுங்கள். அவர் உங்களுக்கும் கேட்டவை எல்லாம் தருவார்.

"வெற்றியை தருபவரே ஓம் சக்திவேல்"

*'ஓம் சக்திவேல் ஓம்'*

உள்ளன்புடன்,
மௌனிஷா பாலசுரேஷ்,
ஜெராட்ஸ் கிராஸ்,
ஐக்கிய இராச்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Front of God - No Age

I am Mounisha Balasuresh. First of all, I would like to thank my parents since they are the first one to teach me how to pray and how to respect our elders. My parents are very religious. I follow them in my life also. I'm not even 15 years old yet and I am writing this story.

Why I am telling this, is people who wrote their story in the book "Velanin Arulil Ulagam Uyya" are older than me and have more experience in their life than me. I want to emphasize that God does not think about age. He only considers the people's love and devotion towards him irrespective of their ages. Your true love for God that matters lead one to have a successful life.

Now I am telling about Om Shakthivel Temple. I know Om Shakthivel Temple through my Grandfather. When I went to the temple for the first time, it was amazing. The way they do prayers and the management of the temple are completely different from other temples. I remember my dad saying that it was a dream for him to have a house in Gerrards Cross. One day while passing the area, we saw 3 houses under construction.

After some time, we came across the advertisement of these 3 brand new houses on sale. We went to see the houses and we liked one of them.I asked my dad, "I want this house". But my dad totally refused the first time saying, "We already have a house, then why buying another house?" Consequently, I started to write 'Om Shakthivel Om' 36 times everyday for 36 days. I stayed vegetarian at that time. I asked Om Shakthivel honestly and truly, "Please, help my dad to get this house".Om Shakthivel did not ignore my prayers. He helped my dad to buy his dream house. When I am writing this story, I am now in our dream house for real.I am telling you guys to believe truly in Om Shakthivel. He will bless you all.

I am a big devotee of Om Shakthivel now and will remain so in future.

I always love my Om Shakthivel.

"Om Shakthivel Om"

**Lovingly,**
**Miss Mounisha Balasuresh,**
**Gerrards Cross,**
**UK.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குல தெய்வம் ஓம் சக்திவேல்

பருத்தித்துறை வீட்டில் உள்ள பேச்சி அம்மன் எங்கள் குடும்ப தெய்வம். எனக்கு 17 வயது இருந்த போது என் அப்பா ரத்தினசிங்கம் காலமானார். அதன் பின் குடும்ப பொறுப்புகளை நான் ஏற்றுக் கொண்டேன். அப்போது பேச்சியம்மனை பிரார்த்தனை செய்து வந்தேன்.

இங்கிலாந்து வந்த பின்பும், அம்பாளையே பிரார்த்தனை செய்து வந்தேன். ஆலயங்களுக்கு சென்றால் என்னால் முடிந்த உதவிகள் மற்றும் ஆலயத்தை சுத்தம் செய்யும் தொண்டுகள் வரை செய்து வந்தேன்.

கடவுள் மேல் எனக்கு பயபக்தியும், நம்பிக்கையும் அதிகமாகவே உள்ளது. அதே போல் இறைவனுக்கு பூசைகள் செய்யும் பூசகர்களையும் மதிப்பேன். அவர்களுக்கு மரியாதையும் கொடுப்பேன். இது நான் என் தந்தையிடம் கற்றுக் கொண்டது.

ஓம் சக்திவேல் ஆலயத்தை எனக்கு அறிமுகப்படுத்தியது என் மருமகள். இங்கிலாந்தில் உள்ள ஆலயங்களுடன் ஒப்பிடுகையில் ஓம் சக்திவேல் ஆலயம் முற்றிலும் மாறுபட்டது.

ஓம் சக்திவேல் ஆலயத்தை எங்கள் குடும்ப ஆலயமாகவே நினைக்கிறோம். மகனின் சாரதிபத்திர தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்று "வெற்றியை தருபவனே, ஓம் சக்திவேலனே" என்று வேண்டினேன். அதேபோல வெற்றியை தந்து என் மகன் சாரதி பத்திரம் பெற்றுள்ளார்.

மகனின் 21 வயது பிறந்தநாளுக்கு அவருக்கு ஒரு புதிய கார் வாங்க நினைத்தேன். என் விருப்பத்தை ஓம் சக்திவேல் நிறைவேற்றி வைத்தார்.

முன்பு என் மகன் ஓம் சக்திவேலை நம்புவது குறைவு. இப்போது அவர் என்னைவிட மிகவும் நம்புகிறார். ஜூன் மாதம் 2017ல் செல்வாநகர் கிளிநொச்சியில் உள்ள ஓம் சக்திவேல் ஆலயம் சென்றோம். அங்கு ஆலய கும்பாபிஷேகம் என் குடும்பத்தாரின் தலைமையில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வாழ்க்கையில் நாங்கள் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. நானும் என் தலைமுறையும் ஓம் சக்திவேலை எங்கள் குடும்ப தெய்வமாக நினைத்து எப்போதும் பிரார்த்தனை செய்வோம்.

"வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தின் இரண்டாவது பதிப்பில் என் கதையை எழுத வாய்ப்பு தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றி.

ஓம் சக்திவேலை நம்புங்கள்!!! உங்கள் குடும்பத்தார் இவ்வுலகில் சந்தோஷமாக இருப்பார்கள்.!!!

*'ஓம் சக்திவேல் ஓம்'*

**அன்புடன் திரு.செல்வகுமார் (மாமா),**<br>**ஹேய்ஸ்,**<br>**பிரித்தானியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Family God – Lord Om Shakthivel

Our family God is Pechi Amman. When I was 17 years old, my dad Mr Ratnasingam passed away. After that, I had lots of responsibilities towards my family. That time also, I prayed God Pechi Amman.

I came to the UK for better life and to help my family. In between, I always prayed Amman. I have been to Amman Temple and involved myself in several activities such as cleaning the temple and so on.

In my life, I always pray to God and in my heart, I respect the priest (Guru). Most of the people never respect the priest (Guru). My father taught me and my family that in our life, we have to give respect to the priest (Guru).

One of my nieces introduced us to Om Shakthivel Temple. I had been there and I can tell that compared to other UK temples, this temple is totally different. It looks like our family temple. I also give my heart and service to this temple as I consider it as my family temple.

I asked Om Shakthivel to help my son for his driving exam. My son that day passed his practical exam and now got the full driving licence.

For my son's 21st Birthday, I wanted to give him a brand new car. He now got his birthday present, a band new car. Before my son did not have much belief on Lord Shakthivel. Now, after Lord Shakthivel bestows his blessing on him, he started to believe Lord Shakthivel more than I do. Taking into consideration my father's advice, I have been following his footsteps and I am happy to see my son also following my footsteps.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Shakthivel took my family and me one step up. In June 2017, I went to Om Shakthivel Temple in Selvanagar, Kilinochchi, Sri Lanka. That was the first Kumbabishekam me and my family did in the Om Shakthivel Temple. In my life, I never expected such kind of generosity from Om Shakthivel. I consider Om Shakthivel as our family God. My generation and I will always continue to pray Om Shakthivel.

Thanks to Om Shakthivel Temple for writing my story in the 2017 great book, "Velanin Arulil Ulagam Uyya"

'Believe in Om Shakthivel… You and your family will be happy in the World'.

"Om Shakthivel Om"

**Loving,**
**Mr R. Selvakumar (Mama),**
**Hayes,**
**UK.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியை தருபவரே ஓம் சக்திவேல்

வெள்ளரிக்குளம், வவுனியா, இலங்கையைச் சேர்ந்த மார்கரெட் சித்திரகலா ராஜேந்திரன் ஆகிய நான் 2017ஆம் ஆண்டு "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற புத்தகத்தில் எழுத வாய்ப்பு தந்த லண்டன் ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

என்னுடைய மருமகளும், அவரின் கணவரும் (கவுசி பாலசுரேஷ்) இந்த ஆண்டு (2017) லண்டனில் இருந்து இலங்கை வந்திருந்தபோது லண்டன் ஓம் சக்திவேல் ஆலயம் பற்றியும், அதன் அற்புதங்கள் பற்றியும் என்னிடம் கூறினார்கள்.

அதுமட்டுமன்றி செல்வாநகர் கிளிநொச்சியில் உள்ள ஓம் சக்திவேல் ஆலயம் பற்றியும் எனக்கு அறிய தந்தார்கள். தாங்கள் செல்வாநகரில் உள்ள ஓம் சக்திவேல் ஆலயம் செல்ல போகிறோம். "மாமி நீங்களும் வாங்கோ" என்று எனது மருமகள் அழைத்தார். நானும் வருவதாக கூறி நாங்கள் எல்லோரும் ஆலயத்திற்கு சென்றோம். அங்கு சென்றவுடன் எனக்கு ஓம் சக்திவேலிடம் முழு நம்பிக்கை வந்துவிட்டது.

செல்வாநகர் ஓம் சக்திவேல் ஆலயத்தில், லண்டன் ஓம் சக்திவேல் பூசகரை சந்தித்தபோது அவர் கடந்த ஆண்டில் (2016) வெளிவந்த வேலனின் அருளில் "உலகம் உய்ய" என்ற புத்தகத்தை என்னிடம் தந்தார்.

2012 ஆம் ஆண்டு எனது பதவி உயர்வுக்காக நான் பரீட்சை ஒன்று எழுதியிருந்தேன் என்னுடன் எழுதிய சிலருக்கு பதவி உயர்வு கிடைத்துவிட்டது. எனக்கு கிடைக்கவில்லை.

நெடுங்காலமாக அலைந்தும் பலனில்லை.

லண்டன் ஓம் சக்திவேல் பூசகர் சொன்னதுபோல ஒரு நாளைக்கு 36 தடவை "ஓம் சக்திவேல் ஓம்" என்று 36 நாட்கள் மாமிசம் சாப்பிடாமல் எழுதினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5வது தேர்த்திருவிழாவின்போது (06.08.2017)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










ஓம் சக்திவேல் ஆலயம், செல்வாநகரில் , கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுவிஸ் சென்ட் கல்லென் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில்
ஆலயத்தின் நிர்வாகமும், ஆலயத்தின் பிரதம குருவும்,
ஓம் சக்திவேல் ஆலயத்தின் குருவை
கௌரவப்படுத்தியபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி முடிப்பதற்குள் 5 வருடமாக காத்திருந்த எனது பதவி உயர்வுக்கான நேர்முகதேர்வு அழைப்பு வந்தது. 36 தடவை எழுதி முடித்தவுடன் எனக்குரிய பதவி உயர்வும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு தடைப்பட்ட விடயத்தை "வெற்றியை தருபவரே ஓம் சக்திவேல்" என்ற சொல்லின் அதிபதி ஓம் சக்திவேல் எனக்கு எதிர்பாராத ஒரு வெற்றியை தந்துள்ளார்.

இதற்கு முன்பு ஒருபோதும் நான் வேலனை வழிபட்டதில்லை. ஆனால் இப்போது "ஓம் சக்திவேல் தான் என் இதயத்தில் வீற்றிருக்கும் அன்பு தெய்வம்".

அது மட்டுமன்றி எனது குடும்பத்தவர்களுக்கும் வெற்றியைத் தந்து குடும்ப தெய்வமாக எங்கள் இதயத்தில் வலம் வருவாய் ஓம் சக்திவேலா!

ஓம் சக்திவேலை நம்புவோர் கைவிடப்படமாட்டார் என்பதற்கு என் வாழ்வில் நடைபெற்ற அதிசயம் ஒரு சான்றாக அமையட்டும்.

ஓம் சக்திவேல் ஓம்

**திருமதி மார்கரெட் சித்திரகலா**
**ராஜேந்திரன்,**
**வவுனியா,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Whoever believes Om Shakthivel gains victory

I'm Mrs M. Chithrakala Rajendran. I'm living in Vellayar Kulam, Vavuniya, Sri Lanka. I'm thankful to Om Shakthivel Temple for writing my story in the 2nd edition of the 2017 book "Velanin Arulil Ulagam Uyya".

My niece, Mrs Kawshalya Balasuresh, together with her family are living in London. The whole family came to Sri Lanka this year, 2017. Mrs Balasuresh told, "We are going to Om Shakthivel Temple in Selvanagar, Kilinochchi. Would you like to join us?"

They told about the Om Shakthivel Temple, both in London and in Sri Lanka and about its power. It was their first visit to the Om Shakthivel Temple in Selvanagar, Kilinochchi. My family and I accompanied them as we have never been to that place before and so, we started our journey from Vavuniya to Kilinochchi.

When I saw the temple, I started to believe Om Shakthivel heartily and honestly. I met the priest of London Om Shakthivel Temple in Selvanagar that day and he gave me the 1st edition of the book "Velanin Arulil Ulagam Uyya" which was released in 2016.

In 2012, I took the exam for job promotion. Some who did the exam, they passed and got promoted. I also passed my exam and I waited for almost 5 years but, neither had I got any news not did I get the promotion.

The priest told me to write "Om Shakthivel Om" 36 times for 36 days. During that time, I stayed vegetarian. Few days after I started to write it, I received a call for an interview which I waited since 2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When I finished writing "Om Shakthivel Om" for 36 days, eventually I got the promotion.

I have never worshipped Vel in my life before. Now He's my special loving Lord – Om Shakthivel.

I believed Om Shakthivel wholeheartedly and he gave me success in my life.

I pray to Om Shakthivel for my family and let Lord Shakthivel showers his blessings in their life as well.

If you believe Om Shakthivel, He will give success in your life. My story also is one of the examples.

"Who believes in Om Shakthivel will get victory"

"Om Shakthivel Om"

**Mrs. Magred Chithrakala Rajendran,**
**Vellayar Kulam,**
**Vavuniya,**
**Sri Lanka.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புத ஆலயம்

நான் லண்டனில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக இருக்கிறேன். வேறு பல ஆலயங்களுக்கு சென்று, பல பூசகர்களை சந்தித்திருக்கிறேன். லண்டன் ஹரிங்கெயில் அமைந்திருக்கும் ஓம் சக்திவேல் ஆலயமானது தனித்துவம் வாய்ந்தது. ஆலயத்தை நிர்வகிப்பதில் நிர்வாகத்தினர் மிகுந்த அக்கறை செலுத்துகின்றனர். ஆலயத்திற்கு வரும் அனைவரும் குடும்பத்தில் ஒருவராக பார்க்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடுடைய எனது நண்பர் ஒருவர் ஓம் சக்திவேல் ஆலயத்தை பற்றி எனக்கு கூறியிருக்கிறார். அவர் எனக்கு தேர்த்திருவிழா விவரங்களையும் அனுப்பி வைத்தார். ஆனால் என்னால் செல்ல முடியவில்லை. கடந்த 2016ஆம் ஆண்டு மற்றுமொரு பரஸ்பர நண்பர் என்னை ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு ஒரு வெள்ளிக்கிழமை மாலை அழைத்து சென்றார். இவ்வாலயத்திற்கு வெள்ளி, செவ்வாய் மற்றும் விசேட நாட்கள் மட்டுமே உள் செல்ல முடியும்.

ஓம் சக்திவேல் ஆலயத்திற்குள் நுழைந்து அமர்ந்ததும் மிக அமைதியான சூழலை உணர்ந்தேன். அங்கு பூசகர் (அய்யா) அருள்வாக்கு சொல்லி வழிகாட்டினார். அந்த வழிகாட்டுதல் படியே நடந்தேன். மேலும் மேலும் ஆலயத்திற்கு செல்லும் எண்ணம் மேலோங்கியது

இவ்வாலயத்தில் இறையருள் எங்களை வழி நடத்தி செல்வதை நான் மனமார உணர்ந்தேன். இறைசக்தியின் வழி நடத்தலை உள்ளன்புடன் ஏற்றவனாக வாழ்ந்து கொண்டு வருகின்றேன்.

உங்கள் பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைக்க வேண்டும் என்றால், நீங்கள் சுத்தமான மனதுடன் மனமார வேண்டுங்கள். உங்களை ஒருபோதும் ஓம் சக்திவேல் கைவிடமாட்டார்.

இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களை வெறும் கையுடனோ, வெறும் வயிற்றுடனோ அனுப்பவும் மாட்டார்.

ஓம் சக்திவேல் ஆலயத்தின் பூசகரை பற்றி சொல்ல வேண்டுமானால், இவ்வாலயத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் சரியான முறையில் விளக்கம் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னதில் ஒன்றை உங்களுக்கு உதாரணமாக சொல்கிறேன். நாம் கையால் உணவு உண்ணும்போது 5 விரல்களும் எங்கள் உதட்டை தொடவேண்டும் என்று கூறினார். நாம் உண்ணும் உணவை மதிக்க வேண்டும் அப்போதுதான் எங்கள் உடல் அந்த உணவை ஏற்கும் என்கிறார்.

இந்த ஆலயத்திற்கு சென்ற பின்பு, என் வாழ்நாளில் எதிர்கொண்ட பிரச்சினைகள் குறைவதையும், ஒரு சில தடைகள் முற்றிலும் தீர்ந்து போனதையும் உணர்ந்தேன்.

என் தனிப்பட்ட வாழ்க்கையும், தொழில் வாழ்க்கையும் சிறப்பாக மாறியது.

ஆலயத்திற்கு வருகின்ற மற்ற பக்தர்களும் என் நண்பர்களாக ஆனார்கள். நாங்கள் அனைவரும் ஒரு குடும்பத்தினர் என்ற எண்ணத்தை இவ்வாலயம் தந்தது.

எனக்கு அருள் தந்ததுபோல மற்றவர்களுக்கும் ஓம் சக்திவேல் அருள் புரிந்ததை காணும் அதிர்ஷ்டசாலி ஆனேன்.

விதை ஒன்று மரமாகி கனிதர சில நாட்களாகும். அதுபோலவே நம் வாழ்வில் நற்பலன்கள் காண பொறுமை, மற்றும் இறை நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டுமென்று ஓம் சக்திவேல் பூசகர் (அய்யா) எப்போதும் கூறிவருவார்.

கடந்த 2016ஆம் ஆண்டும், இந்த ஆண்டும் ஓம் சக்திவேல் ஆலயத்தில் சிறப்பு பூசைகளில் பங்குபெற்றதை பெரும் பாக்கியமாக எண்ணுகிறேன்.

என்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டதில் மகிழ்ச்சி. இதை படிப்பவர்களுக்கு நன்றி. இவை உங்களுடைய ஆன்மீக பயணத்திற்கு உதவியாக இருக்குமென நினைக்கின்றேன்.

“வேலனின் அருளில் உலகம் உய்ய” என்ற 2017 ஆம் ஆண்டு புத்தகத்தில் எழுத வாய்ப்புத்தந்த ஓம் சக்திவேல் ஆலயத்திற்கு நன்றி

**உண்மையுள்ள,**
**திரு. மணிசர்க்கார்.**
**கிழக்கு இலண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Wonderful Om Shakthivel Temple

I live in London for nearly 10 years now, and I have been to a lot of temples in the city and met a number of priests there. But our Om Shakthivel Temple in Haringey, North London is unique and incomparable to all of them.

Everything about it makes me feel at home. The temple management works very hard for the upkeep of the temple and they treat everyone like family. I haven't come across a temple that was open on special days and special timings in my history of temple visits.

A highly spiritual friend had mentioned to me about the Om Shakthivel Temple two years ago, and even sent me details about the yearly Chariot Festival, but I could not attend it that year. Last year, 2016 another mutual friend brought me to the Om Shakthivel Temple one evening on Friday and it felt different when I stepped in and sat down, the energy and ambiance was much calmer and peaceful.

I was blessed with Om Shakthivel speaking through Ayya and delivering a personal and spiritual message for me, on my visit, and message was spot on. I followed the advice and since then, I was drawn to come to the temple regularly. I knew from then that, this place is a holy and a special place and that, God and Goddess are always present there, listening to our prayers and watching our actions – nothing escapes their vigil.

If you want your prayers heard and answered, then please offer prayers from your heart and with a clear mind, to the God and Goddess of the temple. Om Shakthivel never lets anyone leave the temple empty hand or empty stomach.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The priest is constantly advising and guiding us in ways of doing things from praying, offering prayers and offering respect to even when eating food.

I noticed since I have been visiting the temple, many obstacles in my life were removed or diluted. Many people around me became close friends, I also made a lot of friends at the Om Shakthivel Temple, and they give me a feeling of family and belonging.

I have been fortunate to witness changes and transformations in people all around me. My personal and professional life has also transformed for the better now. It all takes time and dedication.
Ayya keeps reminding us - a fruit seed takes time to turn from a sapling to a tree that bears ripe fruits, develop patience.

Adding to that I have also been blessed with opportunities to offer prayer rituals at the temple both last year, 2016 and this year, 2017. Also I got many other opportunities to offer my obeisance at Om Shakthivel Temple. I know from all these experiences that whenever and however often I'm needed at this holy place, I will be drawn to it with or without my knowing.

Thank you for reading about my sentiments and I hope this helps you in your spiritual journeys as well. I humbly thank Om Shakthivel Temple for accepting me and writing my story in the 2nd edition of the book "Velanin Arulil Ulagam Uyya" and giving me this opportunity to serve the temple and the devotees who attend it, I pray and wish the same for everyone.

"Om Shakthivel Om"

**Truly,**
**Mr.Mani Sarkar,**
**East London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் சந்நதிவேலும் ஓம் சக்திவேலும்

இலங்கை செல்லும் போதெல்லாம் யாழ்ப்பாணம் சென்று முதலாவது சந்நதிவேலை தரிசித்து அங்கு சாப்பிட்டு விட்டு தான் எந்தவொரு நிகழ்விலும் ஈடுபடுவேன்.

சென்ற 2016 ஆம் ஆண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை தாய் சந்நதிவேலை தரிசிக்க சென்ற போது எங்கள் வாகனத்து சில்லின் காற்றுப் போய் விட்டது. அதனை திருத்தி செல்ல தாமதமாகி விட்டது. பின்னர் தாய் சந்நதி வேலை தரிசனம் செய்தவுடன் எனக்கு பசியோ வந்து விட்டது. நேரமோ சென்று விட்டது. தாய் சந்நதிவேல் சொன்னார் எனக்குரிய சாப்பாடு ஒரு மடத்தில் இருக்கிறது என்று.

அங்கு சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு முன்னுள்ள வாகனத்தில் வந்தவர்களுக்கு அந்த மடத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள் சாப்பாடு முடிந்து விட்டது. நேரம் பிற்பகல் 2 ஆகி விட்டது என்று.

தாய் சந்நதிவேலிடம் சொன்னேன் சாப்பாடு முடிந்து விட்டது என்று. அதற்கு அவர் "நீ அவர்களிடம் கேள் 2 சாப்பாடு" என்றார்.

உடனே என் தம்பியிடம் நான் சொன்னேன் "2 சாப்பாடு இருக்கிறதா என்று நீ கேள்" தம்பி சென்று அய்யா 2 சாப்பாடு இருக்கிறதா என்று கேட்டார். ஒன்று உங்களுக்கு இன்னுமொன்று யாருக்கு என்று கேட்டார்கள். அப்போது வாகனத்தில் இருந்து இறங்கினேன். அவர்கள் எங்களை உள்ளே அழைத்து சென்றார்கள். எங்களுக்கு வயிறார உணவளித்தார்கள். அந்த ஆச்சிரமம் மக்களால் மோகன் மடம் என அழைக்கப்படுகிறது.

தாய் சந்நதிவேல் "உனக்கு ஓரிடமும் உணவில்லாத போது எந்த இடத்தில் உணவு கிடைத்ததோ, நீ என்னிடம் வரும் போது அந்த சந்நதியான் மடத்திலேயே (மோகன் மடம்) உணவு உண்ண வேண்டும்." என கட்டளை இட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த வருடம் (2017) இலங்கை சென்ற போது மோகன் மடத்திற்கு உணவு அருந்த சென்றேன். நிறைய கூட்டம் இருந்தபடியால் முதல் பந்தியில் இடம் இல்லை என்று என்னை ஓரிடத்தில் இருக்க சொன்னார்கள்.

அப்பொழுது அங்கு ஒருவர் வந்து, ஏன் நீங்கள் இதில் இருக்கிறீர்கள்? என்றார். அங்கு இடமில்லை எனக் கூறினேன். அவர் சொன்னார், உங்களுக்கு அங்கு ஓரிடம் இருக்கிறது, அதில் சென்று சாப்பிடுங்கள் என்றார். நானும் முதல் பந்தியில் இருந்தே உணவு உண்டேன்.

பின்னர்தான் தெரிந்தது, சொன்னவர் அந்த மடத்தின் நிர்வாகி மோகன் அய்யா என்று.

உணவு உண்டபின் தாய் சந்நதிவேலிடம் கேட்டேன் "ஏன் எனக்கு இப்படியொரு கட்டளை இட்டீர்கள்?"

"என்னை தேடி வருகின்ற பக்தர்களுக்கு தினந்தோறும் உணவளித்து வருகின்ற அன்பு பக்தனின் (மோகன் அய்யா) தொண்டினை உனக்கு காட்டுவதற்காகவும், அன்னதானத்தின் சுவை உனக்கு பிடிக்கும் என்பதாலும், இந்த ஆண்டு "வேலனின் அருளில் உலகம் உய்ய" 2017ஆம் ஆண்டின் புத்தகத்தில் அவருடைய சேவையை எழுதுவதற்காகவும் உனக்கு அவ்வாறு கட்டளை இட்டேன்" என்றார்.

மோகன் அய்யாவின் சேவை மென்மேலும் தொடரட்டும்!! ஓம் சக்திவேல் மற்றும் சந்நதிவேலின் அருட்கடாட்சம் எப்போதும் அவருக்கு உண்டு.

"ஓம் சக்திவேல் ஓம்"

**சந்நதிவேலின் ஆசை புத்திரன்,**
**ஓம் சக்திவேலின் தவ புதல்வன்,**
**ஓம் சக்திவேல் ஆலயத்தின் பூசகரும்**
**லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mum Sannathivel and Om Shakthivel

Every year I visit Sri Lanka. Whenever I go to Jaffna, the first thing I do straight away is to go and visit mum's place Selva Sannathi and do my prayer. The rest of the works start only after my visit to Selva Sannathi Temple.

In 2016, I visited mum's place. It was a Sunday. On the way to the temple, my vehicle's tyre got punctured. By the time we repaired the puncture and reached the place, it was already late. As usual I did my prayer. After prayer, I was hungry. Unfortunately, there was no food available at that time. Then mum Sannathivel Said, "Go to Sannidhiyan Annadana Asramam (people also call Mohan Ashram) and have food there."

Me and My brother, we both started to that place and it was around 2:00pm we reached there. I was sitting in the vehicle and in front of the vehicle, nearly 10 people were in a van. The ashram people said the food was finished. Mum Sannathivel said to me, "You ask them for 2 people food."

Said so, my brother went and asked them if they have food for 2 people. Eventually, he asked for them. They said, "Yes, we have. One is for you and for whose is the other one?" I got down the vehicle; they welcomed us and gave the food to both of us. The food was very delightful and nice.

This year, 2017, again I have been to mum's place. After the prayer, while waiting for the temple food, Mum Sannathivel said, "You don't wait here. Last time when you were hungry, no one gave you food. Go to that place where you got food. The people there will give you food. Whenever you come to me, always go there and have food."I said, "Ok".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On reaching the Sannidhiyan Annadana Asramam, I saw it was very crowded. The first group was entering and one person stopped me saying it was already full and that I have to sit and wait for the second group.

I was sitting there and one person came to me. He asked, "Why are you sitting here?" I told, "It's already full and there's no space." He then replied, "The place is there, go and have your food."

Taken the place showed to me, I had my food with the first group. After my lunch, I realised that this person is actually the one in charge of this ashram. He is known as Mohan Ayya of Sannidhiyan Annadana Asramam. I asked Sannathi mum, "Why you order for me like this?"

He answered, "He's a true devotee and he has tremendous belief on me. Whoever come to the temple and whoever need food under my name, he's the one who offer food to everyone and everyday (7 days and 365 days). I know about his dedication in his life and also I know you like this food. It's a must that his service should be written in the book "Velanin Arulil Ulagam Uyya". That's the reason I sent you there."

"May the blessings of Sannathivel and
Om Shakthivel be always with Mohan Ayya in his life".

"Om Shakthivel Om"

**Loving baby of Sannathivel,**
**Om Shakthivel Priest,**
**London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிசம் உண்டவனை மணி அடித்து பார்க்க வைத்த வள்ளி மணவாளன்

அன்பார்ந்த ஓம் சக்திவேலின் அடியவர்களே!

"மாமிசம் உண்டவனை மணி அடித்து பார்க்க வைத்த வள்ளி மணவாளன்" என்ற தலைப்பில் அடியேன் வேலனுக்கு ஆற்றும் தொண்டினை இவ்வுலகிற்கு எடுத்து கூறுவதற்காக "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற தலைப்பில் 2017ஆம் ஆண்டின் புத்தகத்தில் அறிய தருகின்றேன்.

ஓம் சக்திவேல் உத்தரவிற்கு இணங்கவே அவரின் கால் பணிந்து இந்த தொடர்கதையை இவ்விதழ் மூலம் தொடங்குகின்றேன்.

அமரர் மஹாலட்சுமி, திரு நடேசபிள்ளை தம்பதிகளின் இரண்டு பிள்ளைகளில் மூத்த பிள்ளையாக பிறந்தேன்.

இவ்வுலகிற்கு உடனடியாக வா என்று சந்நதி தாய் அழைத்தும், தாயின் வயிற்றில் இருந்து உடனே வந்து விட்டேன். முன்னரே வெளியே வந்ததால் உயிர் தப்ப மாட்டேன் என்று எல்லோரும் எண்ணியபோதும், மருத்துவமனையில் அடைகாப்பு பெட்டகத்தில் (கண்ணாடி பெட்டி) வைத்திருந்தார்கள்.

அப்போது பெற்றோர்கள் சந்நதி தாயிடம் சென்று "எங்களுடைய மூத்த பிள்ளை உயிர் தப்பினால், முதல் முடியை உனக்கு காணிக்கையாக தருவோம்" என்றார்கள்.

ஆனால் அவர்கள் அதை செய்யாமல் மூளாய் முருகன் ஆலயத்தில் தலை முடியை கொடுத்தார்கள். இதனால் தாய் சந்நதிவேல் சற்று கோபமடைந்து தன் ஆசை புத்திரனை பெற்றோர்களிடமிருந்து மாமி எடுத்துச் செல்ல வழிவகுத்தார். ஏனென்றால் அவர் வசித்த இடம் கம்பர்மலை வல்வெட்டித்துறை. அதாவது தாய் சந்நதிவேலின் அருகாமை.

மாமியிடம் வரவில்லை என்றால் தாய் சந்நதிவேலை பார்ப்பது மிகவும் கடினமான ஒரு விடயமாக இருந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால் பெற்றோர் வசித்த இடம் சுழிபுரம், கிளிநொச்சி. வளர்ப்பு அம்மா மாமி சரஸ்வதி வைத்திலிங்கம் அவர்களின் ஏழாவது பிள்ளையாக வளர்ந்தேன்.

மாமி (கடை அம்மா) தனது ஆறு பிள்ளைகளையும் விட அதிக பாசமும், அன்பும், அக்கறையும் வைத்து வளர்த்தார்.

நாங்கள் இருவரும் வெளியே செல்லும்போது, "உங்களுடைய இளைய பிள்ளையா" என்று எல்லோரும் கேட்பார்கள். உலகிலேயே அவரைபோல ஒரு மாமி வேறு யாருக்கும் கிடைத்திருக்காது. அந்த அளவிற்கு தனது தம்பியின் மகனாக இருந்தபோதும், மகனைப் போலவே வளர்த்தார்.

இரண்டு தாய்களின் அரவணைப்பையும், மூன்று அக்காமார்களின் பாசத்தையும், மூன்று அண்ணாமார்களின் அன்பையும் பெற்று செல்வசந்நதி வேலனின் ஆசை புத்திரனாகவே வளர்ந்து வந்தேன்.

அன்றும், இன்றும், என்றும் தாய் சந்நதிவேலின் கட்டளைக்கு இணங்கவே எந்தவொரு செயலையும் செய்வேன். தாய் சந்நதிவேல் மற்றும் வல்வை முத்துமாரியின் சொற்படியே தூரதேசம் வந்தேன். இன்று லண்டனில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றேன்.

பெப்ரவரி 2011க்கு முன்பு மாமிசமே விரும்பி புசித்து வந்தேன். ஆறு நாட்களும் மாமிசம் உண்பதை வழக்கமாக கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமைகளிலும் மாலை ஆறு மணிக்கு பின்பு, சூரியன் அஸ்தமனம் ஆகிவிட்டது. சனிக்கிழமை தொடங்கி விட்டது என்று மாமிசம் உண்பேன். அதிகமாக விரும்பி உண்ட உணவு (பிக் மேக் மீல் - மாட்டிறைச்சி).

வாழ்க்கையில் இன்பதுன்பங்கள் மற்றும் தோல்விகளை கொண்ட சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவனை தாய் சந்நதிவேல் எவ்வாறு வழி நடத்தி கொண்டிருக்கின்றார் என்பதை தொடர்ந்து நீங்கள் அறியலாம்.

அடுத்த இதழில் தொடரும்!!!!

"ஓம் சக்திவேல் ஓம்"

**சந்நதிவேலின் ஆசை புத்திரன்,**
**ஓம் சக்திவேலின் தவ புதல்வன்,**
**ஓம் சக்திவேல் ஆலயத்தின் பூசகரும் லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Who eats non-veggie, he's come as priest – a blessing of Lord Muruga

Dear Om Shakthivel Devotees,

This title 'Who eats non-veggie, he's come as priest – a blessing of Lord Muruga' tells about my life and my dedication to Om Shakthivel. I am starting this story in the 2017 edition of the holy book "Velanin Arulil Ulagam Uyya" as per the order of Om Shakthivel. Hence, I touch his feet and start my story this year which will have continuous sequels for the years to come.

Mrs Mahalakshmi and Mr Nadesapillai, my parents, have 2 children and I'm the first child of this family. When I was in my mother's womb, Sannathivel mum wanted me to come to this world as soon as possible and hence with the wish of Lord Sannathi Muruga, I was born premature. That time everyone stayed in the hospital as my condition was critical. The doctors said that they will try their best but they could not give any guarantee about my life and I was being kept in the incubator.

My parents prayed to Lord Selva Sannathi and said, "If our baby survives, we will offer his first hair to you." But my parents did not do it. Instead, they offered my hair to another temple known as Moolai Murugan Temple. The Lord Sannathivel was little bit angry with my parents. After that, my aunt took me to her place in Kamparmalai, Valvettithurai which is close to the Selva Sannathi Temple. If my aunt did not take me to her place, it would have been very difficult to come and visit Lord Sannathivel as my parents were residing in Chulipuram, Kilinochchi which is very far from the Lord Selva Sannathi's place.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My foster mum, also my aunty, Mrs Saraswathy Vaithilingam, has 7 children. I'm the 7th one. My aunt has 6 children of her own but she had more affection, love and care for me. When my aunt and I, we both go out, people could see how caring she was towards me and they often asked, "Is he your last child?" In this world, no-one would have got an aunt like mine because even though I'm her brother's son, she looked after me like her own son.

I proudly say that I grew up under the care of 2 mothers, affection of 3 sisters, love of 3 brothers and as the loving son of Lord Sannathivel. All the time and even until now, I'm doing everything as per the Lord Sannathivel's direction. I tell everyone that Lord Sannathivel is also my mum. Under the directions of Mum Sannathivel and Valvai Muthumaari Amman, I came to London. Now I live in London with my family.

Before February 2011, I was eating non-veg 7 days and even on Fridays after 6:00pm because for me the sunset on Friday meant Saturday already started.

My Favourite food was the Big Mac Meal. In my past life, I had happiness and unhappiness, a failure life and a normal life. How my Mum Sannathivel directed me, you will get to know in the following editions.

The story continues ............

"Om Shakthivel Om"

**Sannathivelan liking son,**
**Om Shakthivel loving son,**
**Priest of Om Shakthivel Temple,**
**London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் சக்திவேல் ஓம்'

"Om Shakthivel Om"

## நன்றியுரை

ஓம் சக்திவேல் ஆலயத்தின் 5ஆவது தேர்த்திருவிழாவை வெற்றிகரமாக நடத்திய அனைத்து பக்தர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

5ஆம் வருட தேர்த்திருவிழாவில் (2017) சிறப்பு விருந்தினராக பங்கு பற்றிய மேயர் கவுன்சிலர் திரு. ஸ்டீபன் மேன் மற்றும் அவரது மனைவி திருமதி ஜெனிபர் மேன், ஹரோ கவுன்சிலர் திரு. கிருஷ்ணா சுரேஷ் மற்றும் அவரது மனைவி திருமதி. சசி சுரேஷ் ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதான அனுசரணை வழங்கிய BM Coachesக்கு சிறப்பு நன்றி.

கடந்த சில வருடங்களாக ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் உறுதுணையாக இருந்து வழி நடத்திய திரு. நாகராசா *(உயர்வாசற்குன்று முருகன் ஆலய செயலாளர்)* அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஆலயத்தின் சகல அச்சுப்பிரதிகளையும், இரண்டாவது அச்சுப்பதிப்பையும் வடிவமைத்து தந்த SSR பதிப்பகத்திற்கு நன்றியை தெரிவிக்கின்றோம்.

"ஓம் சக்திவேலின் அருட்கடாட்சம் அனைவருக்கும் உண்டாகட்டும்"

*"ஓம் சக்திவேல் ஓம்"*

## Thank You

The Om Shakthivel Temple has the pleasure to thank all the devotees and everyone who contributed in making the 5th Chariot Festival a success. Thank you to London Borough of Haringey Mayor, Councillor Stephen Mann and his Mayoress, Councillor Jennifer Mann and London Borough of Harrow Councillor Krishna Suresh and his wife, Councillor Sasi Suresh for participating in the 2017 Chariot Festival.


Special thanks to our main sponsor, BM Coaches for their contribution. Thank you to Mr. K. Nagarajah, (Secretary, Highgate Murugan Temple) for his dedication towards the Om Shakthivel Temple. Thank you to all the people who sent their stories to be published in the 2nd Edition "Velanin Arulil Ulagam Uyya" and last but not the least we thank our Printer, SSR Printers, Jaffna for their collaboration in the printing of the 2nd Edition.

*"May the blessing of Om Shakthivel be upon you all"*

"Om Shakthivel Om"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"மாமிசம் உண்டவனுக்கு**
**இரண்டு ஆலயம் தந்த வள்ளி மணவாளன்"**

அடுத்த இதழில் தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Om Shakthivel Temple

657 Green Lanes, Haringey, London N8 0QY, UK.
Tel: 0203 620 1637, 0203 640 8113, 0742 951 6874
Email: omshakthivelan@gmail.com
Website: www.shakthivel.co.uk

Printed @ SR Printers Malu Mobile 0094 767687664

BMCoaches
Your Partner in Travel

Tour & Private Coach Hire
UK and Europe



0208 848 7711

BM House
Silverdale Road, Hayes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org